1984 பிப்ரவரி 15]

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, சோழன் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் இந்த திட்டத்தில், பணிமனையிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பால் உள்ள அம்மாசத்திரம் என்ற கிராமப் பகுதி ஆர்ஜிதம் செய்யப்பட்டிருப்பதாக தகவல். ஆனால் பணிமனைக்கு அருகிலேயே நிலம் இருப்பதாகவும் தகவல். எனவே அப்படி பணிமனைக்கு அருகிலே இருக்கும் இடங்களையே ஆர்ஜிதம் செய்து தொழிலாளர்களுக்கு வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அம்மாசத்திரம் என்னும் அந்த இடத்திலேதான் $9\frac{1}{4}$ ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அங்கே 87 வீடுகளைக் கட்டுவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படி அருகிலேயே இடம் இருக்குமேயானால், அதை பயன்படுத்திக் கொள்ள மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரைப் போன்றவர்கள் உதவி செய்வார்களேயானால், நிச்சயமாக தயக்கம் காட்டாமல் எடுக்கலாம். ஆனால் விலை அதிகமாக இருக்கும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். தொழிலாளர்கள் அவ்வளவு பணம் கொடுத்து வாங்குவதற்கு சிரமப்படுவார்கள். எனவே குறைந்த விலையில் கிடைத்தால் வாங்கலாம். நிலங்கள் மேலும் தேவைப்படத்தான் செய்கிறது. எனவே குறைந்த விலையில் கிடைத்தால் கையகப்படுத்த அரசு முயற்சிக்கும்.

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, கையகப்படுத்தப்படவுள்ள மனைகளுக்கான தொகை எவ்வளவு என்பதையும், தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு வருகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன். அத்தோடு, சோழன் போக்குவரத்துக் கழகத்தில் சமீபத்தில் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது. அதில் இந்த நில ஆர்ஜித சம்பந்தமாகவும் ஏதாவது உண்டா? அதாவது இதில் அதற்குச் சம்பந்தம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தனித் தனியாக ஒவ்வொரு நபருக்கும் எவ்வளவு வரும் என்கிற கணக்கு தற்சமயத்திலே என்னிடத்திலே இல்லை. அங்கே ஒரு தவறு நடந்திருக்கிறது, அதை நாங்கள் கண்டு பிடித்திருக்கிறோம். இந்த அரசு வந்த பிறகுதான் அதைக் கண்டு பிடித்திருக்கிறது. ஏறத்தாழ பத்து வருட காலமாக அந்த ஊழல் நடைபெற்றிருக்கிறது என்பதை உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன். முழு விவரத்தையும், அரசாங்கம் விரைவிலே பரிசீலித்து அதை அவைக்கு தெரிவிக்கும்.

அம்பத்தூர் நகரியம் 'மேனாம்பேடில்' என்னும் இடத்திலுள்ள அரசாங்க மாணவர் விடுதி.

*31—(*வினா எண். 12945)*—திரு எல். இளையபெருமாள்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1984 பிப்ரவரி 15

(அ) செங்கல்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை தாலூகா அம்பத்தூர் டவுன்ஷிப்பில் உள்ள மேனாம்பேடில் என்னும் இடத்தில் அரசாங்க மாணவர் விடுதி இருப்பது உண்மையா?

(ஆ) இவ்விடுதியில் மாணவிகளும் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்களா?

(இ) ஆம் எனில், காரணம் யாது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ), (ஆ) மற்றும் (இ) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையின் கீழ் மேனாம்பேடு கிராமத்தில் ஆண், பெண்கள் விடுதி வெங்கடாபுரம் பழைய அஞ்சல் நிலைய வீதியிலும், 30 பேர்களுக்குண்டான ஆண்கள் விடுதி விஜயலட்சுமிபுரம், காந்தி தெருவிலும் இயங்கி வருகின்றன. இவைகளுக்கு இடையில் ஒரு கிலோமீட்டர் தூரம் உள்ளது.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தனியார் கட்டிடங்களில் அந்த விடுதிகளை நடத்துவதாகச் சொன்னார்கள். ஆனால், அந்தத் தனியார் கட்டிடங்கள் சரியாக இல்லாத காரணத்தினால், அரசாங்கத்திற்கு ஆதிதிராவிட நலத்துறை கடிதம் எழுதியிருந்தும், இன்றுவரையில் அந்தக் கட்டிடம் பழுதுபார்க்கப்படவில்லை. வருங்காலத்திலாவது அந்த விடுதிக்கு அரசாங்கத்தின் மூலம் தனித் தனியான கட்டிட வசதிகள் செய்ய அரசாங்கத்திடம் ஏதேனும் குறிப்புகள் உள்ளதா? அதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கக்கூடிய பெண்கள் விடுதியை நிலையான கட்டிடத்தில் அமைக்க வேண்டுமென்றுதான் ஏற்கனவே அரசு ஆணைகள் பிறப்பித்திருக்கிறது. ஆனால், அதற்குத் தகுந்த நிலங்கள் அங்கே கிடைக்காத காரணத்தினால், தற்போது அரசு தனியார் நிலங்களை ஆர்ஜிதம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது. தனியார் நிலங்கள் கிடைக்கப் பெற்றவுடன், கட்டிடங்களைக் கட்டுகின்ற பணிகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கட்டிடம் பழுதடைந்த நிலையில்இருப்பதால், வேறு ஒரு கட்டிடத்தில் அமைக்க ஆதிதிராவிடர் நலத்துறை அதிகாரி ஒரு கடிதத்தை அரசாங்கத்திற்கு அனுப்பியிருந்தார். அந்தக் குறிப்பின் மேல் சரியான, உடனடியான நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், அந்த விடுதியிலுள்ள பெண்கள் தொடர்ந்து அந்த பழுதடைந்த விடுதியிலேயே வசிப்பது அரசுக்குத் தெரியுமா? அங்கே இருக்கின்ற அதிகாரியும், டைரக்டர் ஆப் ஆதிதிராவிட நலத்துறை, செகரட்டரி, சோஷியல் வெல்பேர் மூலம் உடனடியாக நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், நல்ல கட்டிடம் இருந்தும், அந்தப் பிள்ளைகள் சுகமாக இருக்க, தகுதியான இடம் பெறாமல், அந்தப் பழுதடைந்த

விடுதியிலேயே அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா? இனிமேலாவது உடனடியாக அதைக் கவனிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கட்டிடங்களில் இயங்கி வருகின்ற அந்த விடுதிக் கட்டிடங்கள் சரியாக, வசதியாக இல்லை என்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். நம்முடைய நலத்துறை இயக்குநர் அனுப்பியுள்ள குறிப்புகளின் அடிப்படையில் பார்க்கும் போது, தற்போது, அங்கே இருக்கக்கூடிய கட்டிடங்கள் வசதியான, தனித்தனியான கட்டிடங்களாக இருக்கின்றன என்பது தெரிய வருகிறது. இருந்தாலும், உறுப்பினர் அவர்களின் கருத்தின் அடிப்படையில், ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநரை நேரடியாக அங்கே அனுப்பி, தகுதியான வேறு ஒரு கட்டிடத்தைத் தேர்வு செய்து, உடனடியாக அந்த மாணவிகளை அந்த விடுதியில் தங்கவைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் செயல்படுத்தப்படவுள்ள மலைவாழ் மக்களுக்கான மேம்பாட்டு திட்டங்கள்.

32—(*வினா எண் 17266)—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வடாற்காடு மாவட்டம் ஏலகிரிமலை ஜவ்வாது மலைப் பகுதிகளில் எந்தெந்த திட்டங்கள் செயல்படுத்த அரசு திட்டமிடப் பட்டுள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ): விவர அறிக்கையொன்று** அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு தொழிற்பேட்டையை ஆரம்பிப்பதாகச் சொல்லப்படுகிறது. ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எப்போது அங்கே ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்பேட்டை ஆரம்பிப்பதாக உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அதுபற்றிய குறிப்புகள் தற்போது என்னிடத்திலே இல்லை. தனியாக கேள்வி கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**155—156ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.